**செய்தி வெளியீடு எண்: 838** **நாள்: 15.11.2018**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் மாநில சாலைப் பாதுகாப்புக் குழு கூட்டம் 15.11.2018ம் நாளன்று காலை 11.00 மணிக்கு தலைமைச் செயலாளர் கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், நிதித்துறை செயலாளர், நெடுஞ்சாலைத் துறை செயலாளர், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர், போக்குவரத்துத் துறை செயலாளர், காவல் துறை இயக்குநர் மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்று மாநில அளவில் எடுக்க வேண்டிய பல்வேறு சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. போக்குவரத்து ஆணையர் அவர்கள் தமிழகத்தில் விபத்து பற்றிய விபரங்களை குழுவிற்கு எடுத்துரைத்தார். மேலும் தமிழகத்தில் சாலை விபத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மொத்த எண்ணிக்கை ஜனவரி 2017 முதல் அக்டோபர் 2017 வரை 14,077 மற்றும் அதைத் தொடர்ந்து ஜனவரி 2018 முதல் அக்டோபர் 2018 வரை 10,378. இது கடந்த ஆண்டை விட 26 சதவீதம் உயிரிழப்புகள் குறைந்துள்ளது. தமிழகத்தில் 2017ம் ஆண்டு அக்டோபர் வரை 5,559 கொடுங்காய விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது. 2018ம் ஆண்டு அக்டோபர் வரை 5,051 கொடுங்காய விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 9 சதவீதம் குறைந்துள்ளது.

மேலும், மொத்த உயிரிழப்பு விபத்துகளில் இரு சக்கர வாகனங்களில் மட்டும் 32 சதவீதமும் மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் 25 சதவீதமும் ஏற்பட்டுள்ளது. இரு சக்கர வாகனங்களில் இறந்தவர்களில் 75 சதவீதம் பேர் தலைக்கவசம் அணியாததால் ஏற்பட்டதாகும்.

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் தேசிய நெடுஞ்சாலைகளில் முக்கிய சந்திப்புகளில் விபத்துக்களை தவிர்க்க உயர் கோபுர விளக்குகளை பொருத்தவும், தகவல் மற்றும் எச்சரிக்கை குறியீடுகள் (Signages) வாகன ஓட்டிகள் தெளிவாக தெரிந்து கொள்ளும் வகையில் பொருத்தவும், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் தேவையான கனரக சரக்கு வாகன நிறுத்தங்கள் அமைக்கவும் அறிவுறுத்தினார்.

நெடுஞ்சாலைகளில் வாகனங்களை நிறுத்துவதனால் சமீப காலமாக அதிக விபத்துக்கள் ஏற்பட்டு அதனால் உயிரிழப்பு ஏற்படுகிறது. அதை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. நெடுஞ்சாலைகளில் முறையற்று நிறுத்தப்பட்ட வாகனங்களில் ஏற்பட்ட விபத்துக்களில் 2017ம் ஆண்டு 297 பேர் உயிரிழந்துள்ளனர்.

அனைத்து சாலைகளிலும் சீட் பெல்ட் அணியாதது, மது அருந்தி வாகனம் ஓட்டுதல், செல்போன் பேசி வாகனம் இயக்குதல், தலைக்கவசம் அணியாதது ஆகிய குற்றங்களுக்கு

முறையான எச்சரிக்கை பலகைகள் வைக்க சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சி துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நடப்பு 2018ம் ஆண்டில் அக்டோபர் வரை மொத்தம் 2.77 இலட்ச ஓட்டுநர்களின் உரிமங்கள் மேற்கண்ட குற்றங்களுக்காக தற்காலிக தடை செய்யப்பட்டுள்ளது.

சாலை பராமாரிப்பு பணிகள் நடைபெறும் இடங்களில் தக்க எச்சரிக்கை பலகைகள் வைக்கவும், அனைத்து சாலைகளிலும் உள்ள நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றவும் அறிவுறுத்தப்பட்டது. கடந்த 2017ம் ஆண்டு 3,507 பாதசாரிகள் உயிரிழந்துள்ளனர்.

பள்ளி குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பெற முக்கிய நகரங்களில் சாலை பாதுகாப்பு பூங்காக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

நெடுஞ்சாலைகளில் அதிக விபத்து நடக்கும் இடங்களிலும், பொதுமக்கள் நடமாடும் இடங்களிலும் வாகனத்தின் வேகத்தை குறைக்க சிமிட்டும் சிவப்பு விளக்குகள் வேகக்கட்டுப்பாட்டுடன் பொருத்தவும், நேருக்கு நேர் மோதும் விபத்துக்களை தடுக்க நெடுஞ்சாலைகளின் வளைவுகளில் Centre median அமைக்க அறிவுறுத்தப்பட்டது.

வாகனத்தின் பதிவு எண்ணை தானாக கண்டறிந்து புகைப்படம் எடுக்கும் கருவியை சோதனை முறையில் செங்கல்பட்டில் இருந்து திருச்சி வரை 280 கி.மீட்டருக்கு பொருத்தி அதிவேகமாக செல்லும் வாகனங்களை தானாக கண்டுபிடித்து கனினி மூலமாக (e-challan) அபராதம் விதிக்க நடைமுறைப்படுத்த துரிதமாக நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் அதிகமாக விபத்து நடக்கும் இடங்களை (Black spots) கண்டறிந்து குறுகிய கால நடவடிக்கைகள் மற்றும் நிரந்தர நடவடிக்கைகள் எடுத்து அந்நடவடிக்கைக்குப்பின் மேற்கண்ட இடத்தில் மீண்டும் விபத்து நடப்பதை கண்காணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

மேலும் தமிழகத்தில் சாலை பாதுகாப்பு சட்டம் மற்றும் விதிகள் ஏற்படுத்த குழு அமைத்து அறிக்கை அளிக்க அறிவுறுத்தப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**